
செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

சி இலக்குவனார்





NSR 100 Educational Trust


[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-4-0

https://www.annacentenarylibrary.org/pages/view/96.%E0%AE%9A%E0%AE%BF.%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%B5%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1909

செந்தமிழ்சிற்பிகள்

சி.இலக்குவனார் (1909-1973)



அறிமுகம்

பேராசிரியர் சி. இலக்குவனார் (நவம்பர் 17, 1909 - செப்டம்பர் 3, 1973) தமிழறிஞர்களில் தனிச் சிறப்பு வாய்ந்தவர். மொழியியல், இலக் கணம், தொல்காப்பிய ஆராய்ச்சி, திருக்குறளாராய்ச்சி, சங்க இலக்கிய ஆராய்ச்சி எனப் பல்வேறு பொருள்களில் நிறைய நூல்கள் இயற்றியுள்ளார்.

வாழ்க்கைச் சுருக்கம்

திருவள்ளுவராண்டு 1930, கார்த்திகைத் திங்கள், முதல் நாள் (ஆங்கில ஆண்டு 1909 நவம்பர் 17ம் நாள்) தமிழ்நாட்டின் அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் (இன்றைய நாகப்பட்டிணம் மாவட்டம்), திருத்துறைப்பூண் டிக்கு அருகில், வாய்மைமேடு என்னும் சிற்றூரில், குறுநிலக்கிழாராகவும் ஒரு மளிகைக்கடை உரிமையாளராகவும்

விளங்கிய சிங்காரவேலர்-இரத்தினத்தாச்சி ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். தமது நான்கு வயதிலேயே தந்தையை இழந்தார்.

கல்வி

தொடக்கக் கல்வி

வாய்மேட்டில் சுப்பையா ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளியிலும் கண்ணுசாமி ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளியிலும் பயின்றார். பின்னர் வாய்மேட்டில் இருந்த அரசு தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்த இலக்குவனாரின் பள்ளிப்படிப்பு தடைப்பட்டது. தமது அண்ணன் நல்லபெருமாளுக்கு உதவியாக வயல்வேலைகளைக் கவனிப்பதும் மாடுகளை மேய்ப்பதுமே அவரது வேலையாயிற்று.

நடுநிலைக் கல்வி

தன் பிள்ளை படிக்க வேண்டும் என்று அவரது தாயார் விழைந்தமையால் தஞ்சாவூர் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை சார்பில் இராசாமடம் என்னுமிடத்தில் இருந்த நடுநிலைப் பள்ளியில் 1924ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். இங்கு இவர் எட்டாம் வகுப்புப் படித்தபொழுது இலட்சுமணன் என இவரது பெற்றோர் இட்ட பெயரை, இவர்தம் தமிழாசிரியர் சாமி சிதம்பரனார்,இலக்குவன்" என மாற்றச் செய்தார். அப்பொழுது முதலே தனித்தமிழ் மீது நாட்டமும் தமிழில் பிறமொழிக்கலப்பைத் தவிர்க்கும் முனைப்பும் இலக்குவனார்க்கு ஏற்பட்டது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி

பின்னர் 1924ஆம் ஆண்டில் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை சார்பில் ஒரத்தநாட்டில் இருந்த உயர்நிலைப்பள்ளிகளில் பயின்று தமது ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். அங்கு பொன்னண்ணா களத்தில் வென்றார் என்பவரிடம் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றார்.

புலவர் பட்டக் கல்வி

திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று 1936ஆம் ஆண்டில் புலவர் பட்டம் பெற்றார். அங்கு பயிலும்பொழுது அக்கல்லூரியின் திருவள்ளுவர் மாணவர் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கீழைமொழி இளவர் பட்டம்

அன்னாளைய சென்னைப் பல்கலைக் கழகம் வகுத்திருந்த விதியின்படி வித்துவான் பட்டம் பெற்றவர் இடைநிலை வகுப்பிலும் கலை இளவர் வகுப்பிலும் இரண்டாம் பிரிவில் இருந்த ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெற்றால், அவருக்கு கீழைமொழிகளில் இளவர் (BOL) பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டம் கலைமுதுவர் பட்டத்திற்கு இணையாகக் கருதப்பட்டது. இலக்குவனார் ஆசிரியப்பணி ஆற்றிக்கொண்டே ஆங்கிலத் தேர்வுகளில் வெற்றிபெற்று கலைமுதுவர் ஆனார்.

கீழைமொழி முதுவர் பட்டம்

பின்னர் தமிழ்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Growth of Tamil Language) என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து கீழைமொழிகளில் முதுவர் (MOL) பட்டமும் பெற்றார்.

முனைவர் பட்டம்

இலக்குவனார், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, விரிவாக ஆய்வும் நிகழ்த்தித் தமது முனைவர் பட்டப்பேற்றிற்கான ஆய்வேட்டை அளித்தார். 1963-இல் முனைவர் பட்டப்பேற்றிற்காக Tholkappiyam in English with critical studies என்னும் ஆய்வேட்டை அளித்து 1963 ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார். தமது பல்வேறு பணிகளின் காரணமாகவும், பணியிழப்புகளின் காரணமாகவும் காலந்தாழ்த்து 53 அகவையில் இப்பட்டத்தை இவர் பெற்றாலும் தமிழ்நெஞ்சங்கள் மகிழ்ந்துபோற்றின. குமரி முதல் சென்னை வரை இவருக்குத் தமிழ்நாடெங்கும் பாராட்டுவிழாக்கள் நடந்தன. ஒரு பேராசிரியர் முனைவர் பட்டம் பெற்றமைக்காகத் தமிழ்நாடெங்கும் பாராட்டுவிழாக்கள் நடந்த நிகழ்வு இதற்கு முன்புமில்லை:பின்புமில்லை. இவரது தொல்காப்பிய ஆங்கில நூலுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அணிந்துரை வழங்கிப் பாராட்டியுள்ளார். பின்னர் அண்ணா தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, தமது அயல்நாட்டுச் சுற்றுப்பயணத்தில், இந்நூலைப் போப் ஆண்டவர் அவர்களுக்கும், அமெரிக்க நூகலகங்களுக்கும் தமிழக அரசின் சார்பில் அன்பளிப்பாக அண்ணா வழங்கினார்.

ஆசிரியப் பணி

திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றபின், அக்கல்லூரியிலேயே சிலகாலம் பணியாற்றினார். 1936 சூன் மாதம் முதல் 1942ஆம் ஆண்டு

வரை தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் (Tanjore District Board High Schools) தமிழாசிரியப் பணிபுரிந்தார்.

கலைஞர் மு. கருணாநிதி திருவாரூரில் பள்ளி இறுதி வகுப்புப் பயின்றபோது அவரது ஆசிரியராகத் திகழ்ந்தவர். தமக்குத் தமிழுணர்வுடன் சுயமரியாதைப் பண்பையும் ஊட்டியவர்' என்று இவரைப் பற்றித் தமது தன்வரலாற்று நூலாகிய ' நெஞ்சுக்கு நீதி' யில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர் 1942 முதல் 1945 வரை திருவையாறு அரசர் கல்லூரியில் விரிவு ரையாளராகப் பணிபுரிந்தார். பின்னர் 1952 முதல் 1955 வரை புதுக்கோட்டையில் பி.ஏ. சுப்பிரமணியனார் உருவாக்கிய திருக்குறள் கழகத்தில் ஞாயிறுதோறும் திருக்குறள் வகுப்புகள் நடத்தினார்.

1955 –
56 ஆம் கல்வியாண்டில் திருவெறும்பூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர்,
1956 முதல் 1958 வரை ஈரோடு காசனக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் ,
1958 முதல் 1961 வரை நாகர்கோயில் தெ.தி. இந்துக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர்,
1961 முதல் 1965 வரை மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், ஐத்திராபாத்தில் உள்ள உசுமானியா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவர், 31.12.1970 வரை நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு என இவர் பணியாற்றிய கல்லூரிகளின் பட்டியல் பெரிதாகும். இவரது அஞ்சாநெஞ்சமும், தன்மான உணர்வும் எவ்விடத்தும் இவர் தொடர்ந்து பணிபுரிய இடமளிக்கவில்லை. மாணவரிடையே தமிழுணர்வை இவர் ஊட்டியமை, இவர் மாணவர்களைப் புரட்சிக்குத் தூண்டுவதாகக் கல்லூரிப் பொறுப்பாளர்களைக் கருதச் செய்தது.

1944-இல் இவர் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது இவரிடம் தமிழ் பயின்ற, இன்றைய இந்தியப் பொதுவுடைமைக் கட்சித்தலைவர்களில் ஒருவராகிய தோழர் நல்லகண்ணு இவரது அஞ்சாநெஞ்சத்தையும் தமிழுணர்வையும் சிறப்பாகப் பாராட்டுகிறார். அன்றைய தமிழ் வகுப்புகளில் வருகைப்பதிவை ஆங்கிலத்தில் மாணவர்கள் கூறி வந்த நிலையை மாற்றி உளேன் ஐயா எனக் கூறவைத்தவரும் பிறகாலத்தில் தமிழகமெங்கும் இம்மாற்றம் ஏற்படவும் காரணமாக இருந்தவர் இலக்குவனாரே என நல்லுகண்ணு அவர்கள் கூறுகிறார்.

இதழ்கள் வெளியிடல்

இலக்குவனார் தாம் பணியாற்றச் சென்ற இடமெல்லாம் தமிழ்மன்றங்களை நிறுவியும் இதழ்களை நடத்தியும் மக்கள் மனத்தில் தமிழ் எழுச்சியும் ஆர்வமும் ஏற்படப் பாடுபட்டார்.1944 முதல் 1947 வரை இவர் நடத்திய "சங்க இலக்கியம் " வார இதழ் புலவருக்கு மட்டுமே உரியதாகக் கருதப்பட்டுவந்த சங்க இலக்கியங்களை மக்களிடையே பரவ வழிவகுத்தது. சிறுகதை வடிவிலும் ஓரங்க நாடகங்களாகவும் சங்கப்பாடல்களை அறிமுகம் செய்த இலக்குவனாரின் முயற்சியே பின்னாளில் மு. வரதராசன், மு. கருணாநிதி ஆகியோரின் முயற்சிகளுக்கு முன்னோடி என்பது வரலாறு.

விருதுநகரில் இருந்தபோது இலக்கியம் (மாதமிருமுறை), தஞ்சாவூரில் இருந்த போது திராவிடக்கூட்டரசு மதுரையிலிருந்த போது குறள்நெறி எனப் பல்வேறு இதழ்களை நடத்தினார். 1965 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இருமுறை கைது செய்யப்பட்டு சிறைவாழ்வும் பணிநீக்கமும் பெற்ற இலக்குவனார், 1965 மே முதல் திசம்பர் வரை ஏழு மாதங்கள் தமது ஏட்டை நாளிதழாகவும் நடத்தினார். விற்பனையாளர்கள் உரியமுறையில் பணம் கொடுக்காத ஒரே காரணத்தாலேயே இவ்விதழ் நிறுத்தப்பட்டது.

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க என்னும் குறிக்கோளோடு குறள்நெறி என்னும் இதழை 15.1.1964ஆம் நாள் சி. இலக்குவனார் தொடங்கினார்.

Dravidan Ferderation,
Kurnlneri என்னும் இரண்டு ஆங்கில இதழ்களையும் நடத்தினார்.

தமிழ்க் காப்புக் கழகம்

மதுரையை அடுத்த திருநகரில் 6. 8. 1962 ஆம் நாள் தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும் என்னும் நோக்கத்தை முன்வைத்து தமிழ்க் காப்புக் கழகத்தை சி. இலக்குவனார் தொடங்கினார். இக்கழகத்திற்கு அவர் தலைவராகவும் புலவர் இரா. இளங்குமரன் பொதுச் செயலாளராகவும் அமைந்தனர். இக்கழகம் தமிழில் பேசுக! தமிழில் எழுதுக! தமிழில் பெயரிடுக! தமிழில் பயில்க! என்னும் நான்கு செயல் திட்டங்களை முன்வைத்துப் பணியாற்றியது.

சி. இலக்குவனாரின் மாணவர்கள் சிலர்

பின்னாளில் பல்வேறு துறைகளில் புகழ்பெற்ற பலர் சி. இலக்குவனாரிடம் தமிழ் பயின்று உள்ளார்கள். அவர்களில் சிலர்: மு. கருணாநிதி,
முனைவர் கி. வேங்கடசுப்பிரமணியன், நல்லகண்ணு, முனைவர் க. காளிமுத்து,
நா. காமராசன், பா.செயபிரகாசம், இன்குலாப்,
முனைவர் பூ. சொல்விளங்கும்பெருமாள், [சேடபட்டி முத்தையா]]

பெற்ற பட்டங்கள்

முத்தமிழ்க் காவலர், செந்தமிழ் மாமணி, பயிற்சிமொழிக் காவலர், தமிழர் தளபதி, தமிழ் காத்த தானைத் தலைவர், இலக்கணச் செம்மல், தமிழ் அரிமா, தமிழ்ப் போராளி, 20ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர், இரண்டாம் நக்கீரர், பெரும் பேராசிரியர், தன்மானத் தமிழ் மறவர், இந்தி எதிர்ப்புப் படைத் தளபதி, செந்தமிழ்ப் படையின் மானச் செம்மல்


நூற்றாண்டு விழா

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித்துறையினரால் 26 நவம்பர் 2009 அன்று தமிழறிஞர் சி.இலக்குவனாருக்கு எடுக்கப்பட்ட நூற்றாண்டு விழாவில் சிறப்புக் கருத்தரங்கம், கவியரங்கம் ஆகியவை நடத்தப்பட்டன; தமிழகத்தின் நிதியமைச்சரான பேராசிரியர் க.அன்பழகன் சிறப்பித்த, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் தலைமையேற்ற இந்த விழாவில் பேசப்பட்ட இலக்குவனாரின் நற்பணிகளின் விபரம்:

இலக்குவனாரின் தொல்காப்பிய ஆய்வும் மொழிபெயர்ப்பும்
இலக்குவனாரின் சங்க இலக்கிய ஆய்வு
இலக்குவனாரின் குறளுரையும் குறள் பரப்புப் பணியும்
இலக்குவனாரின் கவிதைப் படைப்புகள்
இலக்குவனாரின் இதழியற்பணி
இலக்குவனாரின் தமிழ் வளர்ச்சிப் பணிகள்.

(😊)(😊) @@@@@ (😊)(😊)

சி. இலக்குவனார்



செந்தமிழ்ச் சுடர்

பிறப்பு	இலட்சுமணன் நவம்பர் 17, 1909

	நாகபட்டணம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், வாய்மைமேடு
இறப்பு	செப்டம்பர் 3, 1973 (அகவை 63)
இருப்பிடம்	மதுரையை அடுத்த திருநகர்
தேசியம்	இந்தியர்
கல்வி	வித்துவான், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்டி.
பணி	பேராசிரியர்
பணியகம்	கல்லூரிகள், உசுமானியா பல்கலைக் கழகம்
அறியப்படுவது	மொழியியல், இலக்கணம், திருக்குறளாராய்ச்சி, சங்க இலக்கிய ஆராய்ச்சி
பெற்றோர்	சிங்காரவேலர், இரத்தினத்தாச்சி
வாழ்க்கைத் துணை	மலர்க்கொடி, நீலகண்டேசுவரி
பிள்ளைகள்	திருவேலன் மறைமலை திருவள்ளுவன் மதியழகி நல்லபெருமாள் செல்வமணி நாகவல்லி அங்கயற்கண்ணி அருட்செல்வி அம்பலவாணன்

கல்வி

தொடக்கக் கல்வி

வாய்மேட்டில் சுப்பையா ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளியிலும் கண்ணுசாமி ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளியிலும் பயின்றார். பின்னர் வாய்மேட்டில் இருந்த அரசு தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்த இலக்குவனாரின் பள்ளிப்படிப்பு தடைப்பட்டது. தமது அண்ணன் நல்லபெருமாளுக்கு உதவியாக

வயல்வேலைகளைக் கவனிப்பதும் மாடுகளை மேய்ப்பதுமே அவரது வேலையாயிற்று.

நடுநிலைக் கல்வி

தன் பிள்ளை படிக்க வேண்டும் என்று அவரது தாயார் விழைந்தமையால் தஞ்சாவூர் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை சார்பில் இராசாமடம் என்னுமிடத்தில் இருந்த நடுநிலைப் பள்ளியில் 1924ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். இங்கு இவர் எட்டாம் வகுப்புப் படித்தபொழுது இலட்சுமணன் என இவரது பெற்றோர் இட்ட பெயரை, இவர்தம் தமிழாசிரியர் சாமி சிதம்பரனார், "இலக்குவன்" என மாற்றச் செய்தார். அப்பொழுது முதலே தனித்தமிழ் மீது நாட்டமும் தமிழில் பிறமொழிக்கலப்பைத் தவிர்க்கும் முனைப்பும் இலக்குவனார்க்கு ஏற்பட்டது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி

பின்னர் 1924ஆம் ஆண்டில் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை சார்பில் ஒரத்தநாட்டில் இருந்த உயர்நிலைப்பள்ளிகளில் பயின்று தமது ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். அங்கு பொன்னண்ணா களத்தில்வென்றார் என்பவரிடம் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றார்.[2]

புலவர் பட்டக் கல்வி

திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று 1936ஆம் ஆண்டில் புலவர் பட்டம் பெற்றார். அங்கு பயிலும்பொழுது அக்கல்லூரியின் திருவள்ளுவர் மாணவர் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கீழைமொழி இளவர் பட்டம்

அன்னாளைய சென்னைப் பல்கலைக் கழகம் வகுத்திருந்த விதியின்படி வித்துவான் பட்டம் பெற்றவர் இடைநிலை வகுப்பிலும் கலை இளவர் வகுப்பிலும் இரண்டாம் பிரிவில் இருந்த ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெற்றால், அவருக்கு கீழைமொழிகளில் இளவர் (BOL) பட்டம் வழங்கப்பட்டது.

இப்பட்டம் கலைமுதுவர் பட்டத்திற்கு இணையாகக் கருதப்பட்டது. இலக்குவனார் ஆசிரியப்பணி ஆற்றிக்கொண்டே ஆங்கிலத் தேர்வுகளில் வெற்றிபெற்று கலைமுதுவர் ஆனார்.

கீழைமொழி முதுவர் பட்டம்

பின்னர் தமிழ்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Growth of Tamil Language) என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து கீழைமொழிகளில் முதுவர் (MOL) பட்டமும் பெற்றார்.

முனைவர் பட்டம்

இலக்குவனார், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, விரிவாக ஆய்வும் நிகழ்த்தித் தமது முனைவர் பட்டப்பேற்றிற்கான ஆய்வேட்டை அளித்தார். 1963-இல் முனைவர் பட்டப்பேற்றிற்காக Tholkappiyam in English with critical studies என்னும் ஆய்வேட்டை அளித்து 1963 ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார். தமது பல்வேறு பணிகளின் காரணமாகவும், பணியிழப்புகளின் காரணமாகவும் காலந்தாழ்த்து 53 அகவையில் இப்பட்டத்தை இவர் பெற்றாலும் தமிழ்நெஞ்சங்கள் மகிழ்ந்துபோற்றின. குமரி முதல் சென்னை வரை இவருக்குத் தமிழ்நாடெங்கும் பாராட்டுவிழாக்கள் நடந்தன. ஒரு பேராசிரியர் முனைவர் பட்டம் பெற்றமைக்காகத் தமிழ்நாடெங்கும் பாராட்டுவிழாக்கள் நடந்த நிகழ்வு இதற்கு முன்புமில்லை:பின்புமில்லை. இவரது தொல்காப்பிய ஆங்கில நூலுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அணிந்துரை வழங்கிப் பாராட்டியுள்ளார். பின்னர் அண்ணா தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, தமது அயல்நாட்டுச் சுற்றுப்பயணத்தில், இந்நூலைப் போப் ஆண்டவர் அவர்களுக்கும், அமெரிக்க நூலகங்களுக்கும் தமிழக அரசின் சார்பில் அன்பளிப்பாக அண்ணா வழங்கினார்.

ஆசிரியப் பணி

திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றபின், அக்கல்லூரியிலேயே சிலகாலம் பணியாற்றினார்.

1936 சூன் மாதம் முதல் 1942ஆம் ஆண்டு வரை தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் (Tanjore District Board High Schools) தமிழாசிரியப் பணிபுரிந்தார்.



தமிழறிஞர் கா. அப்பாதுரையுடன் இலக்குவனார்

கலைஞர் மு. கருணாநிதி திருவாரூரில் பள்ளி இறுதி வகுப்புப் பயின்றபோது அவரது ஆசிரியராகத் திகழ்ந்தவர். தமக்குத் தமிழுணர்வுடன் சுயமரியாதைப் பண்பையும் ஊட்டியவர்' என்று இவரைப் பற்றித் தமது தன்வரலாற்று நூலாகிய 'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர் 1942 முதல் 1945 வரை திருவையாறு அரசர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த இலக்குவனார், அன்றைய சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவராகிய

செ.தெ.நாயகம், குலசேகரன்பட்டினத்தில் தொடங்கிய தமிழ்க்கல்லூரியில் முதல்வராகப் பணியமர்த்தம் பெற்றார். பின்னர் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், 1947-ல் விருதுநகரில் தொடங்கப்பெற்ற வி.இ.செந்திற்குமாரநாடார் கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவராகவும் பணிபுரிந்தார். 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் விருதுநகர் தொகுதியில் கு. காமராசரை எதிர்த்துப் போட்டியிட்ட கோ. து. நாயுடு (ஜி. டி. நாயுடு)வை ஆதரித்துப் பரப்புரை செய்தார். இதனால் விருதுநகர் கல்லூரியில் இருந்து துரத்தப்பட்டார்.[5]

பின்னர் 1952 முதல் 1955 வரை புதுக்கோட்டையில் பி.ஏ. சுப்பிரமணியனார் உருவாக்கிய திருக்குறள் கழகத்தில் ஞாயிறுதோறும் திருக்குறள் வகுப்புகள் நடத்தினார்.[6]

1955 – 56 ஆம் கல்வியாண்டில் திருவெறும்பூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர், 1956 முதல் 1958 வரை ஈரோடு காசனக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் , 1958 முதல் 1961 வரை நாகர்கோயில் தெ.தி. இந்துக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், 1961 முதல் 1965 வரை மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், ஐத்திராபாத்தில் உள்ள உசுமானியா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவர், 31.12. 1970 வரை நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு என இவர் பணியாற்றிய கல்லூரிகளின் பட்டியல் பெரிதாகும். இவரது அஞ்சாநெஞ்சமும், தன்மான உணர்வும் எவ்விடத்தும் இவர் தொடர்ந்து பணிபுரிய இடமளிக்கவில்லை. மாணவரிடையே தமிழுணர்வை இவர் ஊட்டியமை, இவர் மாணவர்களைப் புரட்சிக்குத் தூண்டுவதாகக் கல்லூரிப் பொறுப்பாளர்களைக் கருதச் செய்தது.

1944-இல் இவர் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது இவரிடம் தமிழ் பயின்ற, இன்றைய இந்தியப் பொதுவுடைமைக் கட்சித்தலைவர்களில் ஒருவராகிய தோழர் நல்லகண்ணு இவரது அஞ்சாநெஞ்சத்தையும் தமிழுணர்வையும் சிறப்பாகப் பாராட்டுகிறார். அன்றைய தமிழ் வகுப்புகளில் வருகைப்பதிவை ஆங்கிலத்தில் மாணவர்கள் கூறிவந்த நிலையை மாற்றி *உளேன் ஐயா* எனக் கூறவைத்தவரும் பிற்காலத்தில் தமிழகமெங்கும் இம்மாற்றம் ஏற்படவும் காரணமாக இருந்தவர் இலக்குவனாரே என நல்லுகண்ணு அவர்கள் கூறுகிறார்.

இதழ்கள் வெளியிடல்

இலக்குவனார் தாம் பணியாற்றச் சென்ற இடமெல்லாம் தமிழ்மன்றங்களை நிறுவியும் இதழ்களை நடத்தியும் மக்கள் மனத்தில் தமிழ் எழுச்சியும் ஆர்வமும் ஏற்படப் பாடுபட்டார். 1944 முதல் 1947 வரை இவர் நடத்திய "சங்க இலக்கியம்" வார இதழ் புலவருக்கு மட்டுமே உரியதாகக் கருதப்பட்டுவந்த சங்க இலக்கியங்களை மக்களிடையே பரவ வழிவகுத்தது. சிறுகதை வடிவிலும் ஓரங்க நாடகங்களாகவும் சங்கப்பாடல்களை அறிமுகம் செய்த இலக்குவனாரின் முயற்சியே பின்னாளில் மு. வரதராசன், மு. கருணாநிதி ஆகியோரின் முயற்சிகளுக்கு முன்னோடி என்பது வரலாறு.



இலக்குவனாரின் நடைப்பயணம்

விருதுநகரில் இருந்தபோது *இலக்கியம்* (மாதமிருமுறை), தஞ்சாவூரில் இருந்தபோது *திராவிடக்கூட்டரசு* மதுரையிலிருந்த

போது *குறள்நெறி* எனப் பல்வேறு இதழ்களை நடத்தினார். 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இருமுறை கைது செய்யப்பட்டு சிறைவாழ்வும் பணிநீக்கமும் பெற்ற இலக்குவனார், 1965 மே முதல் திசம்பர் வரை ஏழு மாதங்கள் தமது ஏட்டை நாளிதழாகவும் நடத்தினார். விற்பனையாளர்கள் உரியமுறையில் பணம் கொடுக்காத ஒரே காரணத்தாலேயே இவ்விதழ் நிறுத்தப்பட்டது.

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க என்னும் குறிக்கோளோடு குறள்நெறி என்னும் இதழை 15.1.1964ஆம் நாள் சி. இலக்குவனார் தொடங்கினார்.[7]

Dravidan Ferderation, Kurnlneri என்னும் இரண்டு ஆங்கில இதழ்களையும் நடத்தினார்.

நூல்கள்

வரிசை எண்	நூலின் பெயர்	ஆண்டு	வகை	பதிப்பகம்	குறிப்புகள்
01	அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து		செய்யுள்		
02	அமைச்சர் யார்?	1949	ஆராய்ச்சி		
03	அம்மூவனார்		ஆராய்ச்சி		
04	இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்		ஆராய்ச்சி		
05	எல்லோரும் இந்நாட்டரசர் – பகுதி 1	1956	ஆராய்ச்சி		

06	எல்லோரும் இந்நாட்டரசர் – பகுதி 2	1956	ஆராய்ச்சி		
07	எழிலரசி அல்லது காதலின் வெற்றி	1933	செய்யுள்		மொழியாக்கப் பாவியம்
08	எனது வாழ்க்கைப் போர்	1972	தன்வரலாறு	குறள்நெறி வெளியீட்டகம், திருநகர்	
09	கருமவீரர் காமராசர்		வரலாறு		
10	சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்	1990	ஆராய்ச்சி	திருமகள் பதிப்பகம், சென்னை	
11	தமிழிசைப் பாடல்கள்		செய்யுள்		
12	தமிழ் கற்பிக்கும் முறை		ஆராய்ச்சி		
13	திருக்குறள் எளிய பொழிப்புரை		விளக்கவுரை		
14	துரத்தப்பட்டேன்	1952	செய்யுள்		தன்வரலாற்றுக்குறிப்பு
15	தொல்காப்பிய ஆராய்ச்சி	1961	ஆராய்ச்சி		
16	பழந்தமிழ்		ஆராய்ச்சி		

17	மாணவர் ஆற்றுப்படை		செய்யுள்		
18	மாமூலனார் காதற் காட்சிகள்	1956	விளக்கவுரை		
19	வள்ளுவர் வகுத்த அரசியல்		ஆராய்ச்சி		
20	வள்ளுவர் கண்ட இல்லறம்		ஆராய்ச்சி		
21	Brief Study of Tamil words				
22	Semantics				
23	Semantemes and Morphones				
24	Tamil Language	1959			
25	Tholkappiyam in English with Critical Studies	Research			PhD thesis
26	The Making of Tamil Grammar				

சிறைவாழ்க்கை

முதற் சிறை வாழ்க்கை

25 – சனவரி – 1965ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போரின் பொழுது 'அமைச்சர்களைக் கொல்ல முயற்சி செய்தார்' என்பது உட்பட பதினான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 1.2.1965 ஆம் நாள் சி. இலக்குவனார் கைது செய்யப்பட்டார். அவரது வீடும் அச்சகமும் சோதனைக்கு உள்ளாயின. ஒரு மாதமும் ஒரு வாரமும் சிறை வாழ்க்கைக்குப் பின்னர் திருநகரைவிட்டு எங்கும் செல்லக்கூடாது என்னும் கட்டளையோடும் 'எப்பொழுதும் சிறைப்படுத்தப்படலாம்' என்னும் ஆணையோடும் விடுவிக்கப்பட்டார்.

இரண்டாம் சிறை வாழ்க்கை

உயர்நிலைப் பள்ளிகளில் ஒரே நேரத்தில் தமிழைப் பயிற்று மொழி ஆக்கியதைப் போல கல்லூரிகளிலும் ஒரே நேரத்தில் எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் தமிழைப் பயிற்றுமொழி ஆக்க வேண்டும் என்னும் கோரிக்கையோடு 5.5.1965ஆம் நாள் கன்னியாகுமரி முதல் சென்னை வரை தமிழ் உரிமைப் பெருநடை செல்ல இலக்குவனார் திட்டமிட்டார். எனவே 1.5.1965ஆம் நாள் நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இலக்குவானார் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் மூன்றரை மாதங்கள் அடைக்கப்பட்டார். இதனால் மதுரை தியாகராசர் கல்லூரியில் இவர் ஆற்றிவந்த தமிழ்ப் பேராசிரியர் பணியில் இருந்து நீக்கப்பட்டார்.

2.10.71 முதல் 25.12.1971 முடிய சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளில் சொற்பொழிவுப் பயணம் மேற்கொண்டார்.

https://www.valaitamil.com/si-ilakkuvanar_9446.html

தமிழ்க் காப்புக் கழகம்

http://pazhaiya.ilakkuvanar.com/#!/

டாக்டர் சி. இலக்குவனார்
நூற்றாண்டு உரையரங்கம்

https://literaturte.blogspot.com/2011/10/multi-personality-of-drsilakkuvanar.html

Multi personality of Dr.S.Ilakkuvanar
Critical Studies in Tholkappiyam
இலக்குவனாரின் பன்முக ஆளுமை
தொல்காப்பிய ஆராய்ச்சி

இலக்குவனார் இலக்கிய இணையம், சென்னை

இணைந்து நிகழ்த்தும்

டாக்டர் சி. இலக்குவனார் நூற்றாண்டு உரையரங்கம்

நாள்: 29.9.2011 காலை 10.00 மணி

இலக்குவனாரின் பன்முக ஆளுமை
தொல்காப்பிய ஆராய்ச்சி

முனைவர் க. இராமசாமி
பொறுப்பு அலுவலர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

தமிழினத் தொன்மையையும் தனித்தன்மையையும் நிறுவும் வகையில் நமக்குக் கிட்டியுள்ள சான்றுகள் மிகச் சிலவே. அவற்றுள் தலையாயது ஒல்காப் புகழ்த் தொல்காப்பியம். மொழி, இலக்கியம், வாழ்வியல் மூன்றனுக்கும் இலக்கணம் கூறும் பண்பாட்டுப் பெட்டகம். இதுபோன்றதோர் இலக்கண நூல் உலகில் எந்த மொழியிலும் தோன்றியது இல்லை. தமிழிலும்கூட இதற்கு நிகரானதோர் இலக்கண நூல் இதுவரை உருவாகவில்லை. தொல்காப்பியத்திற்கு முன்னர்ப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இலக்கண இலக்கிய வளம் மிக்கதாய்த் தமிழ்

இருந்துவந்திருக்கவேண்டும் என்பதற்கு இதுவே நற்சான்றாய்த் திகழ்கிறது.

தமிழால் வாழ்ந்தோர் பலர், தமிழுக்காக வாழ்ந்தோர் மிகச் சிலர். அம்மிகச் சிலருள் ஒருவரான பேராசிரியர் சி. இலக்குவனார் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த ஆராய்ச்சியாளர், மாணவர்களால் பெரிதும் போற்றப்பட்ட பேராசிரியர், உணர்ச்சிக் கவிஞர், எழுச்சியூட்டும் இதழாளர், தமிழினப் போராளி எனப் பன்முக ஆளுமை வாய்ந்தவர். தமிழின் இரு கண்களாக இலங்கும் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் நுட்பமாய் ஆய்வுசெய்து அறிவுலகிற்கு வழங்கியவர். இவர் ஆற்றிய பல்வேறு பணிகளுள் எக்காலத்தும் நிலைத்த புகழ் தருவதாய்த் தமிழின் மேன்மையை உலகிற்கு உணர்த்துவதாய் அமைந்தது அவரது தொல்காப்பிய ஆராய்ச்சியேயாகும். தொல்காப்பியத்தின் அருமைபெருமைகளைப் பிறமொழி அறிஞர்கள் உணரவேண்டுமென்கிற உயரிய நோக்குடன் அதை ஆங்கிலத்தில் செம்மையாக மொழியாக்கம் செய்திருப்பதுடன் மொழியியல் பார்வையில் ஆழமும் விரிவும் பொருந்தியதொரு திறனாய்வையும் வழங்கியிருப்பது அவரது விரிந்த நூலறிவையும் புலமைசார் ஆய்வு அணுகுமுறையையும் பல்லாண்டுக் கடும் உழைப்பினையும் புலப்படுத்தி நிற்கின்றன.

தொல்காப்பிய ஆய்வு மேனாட்டு அறிஞரிடையே பரவுவதற்குச் சீரிய பணியாற்றிய முன்னோடிகள் என இலக்குவனாரால் குறிப்பிடப்படும் பேராசிரியர்கள் நாவலர் சோமசுந்தர பாரதியார், பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி ஆகிய இருவருமாவர். நாவலர் மேற்கொண்ட ஆய்வு தொல்காப்பியம் முழுமைக்குமாக அமையவில்லை. சாஸ்திரியாரின் ஆய்வு முழுமையானது; ஆனால் சமஸ்கிருதச் சார்பு மேலோங்கி நிற்பது. நூலாசிரியரும் உரையாசிரியர்களும் வகுத்துத்தந்த அடித்தளத்தின்மீது நின்று ஆய்வு நேர்மையினின்று வழுவாது மொழித் திறத்தின் முட்டறுத்த நல்லோராய்த் திட்பமும் தெளிவும் நிறைந்த மொழிபெயர்ப்பினையும் புலமை நுட்பம் வாய்ந்த திறனாய்வினையும் ஆங்கிலத்தில் இலக்குவனார் தந்திருப்பது அறிஞர்களால் பெரிதும் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது.

தொல்காப்பிய நூற்பாக்களின் பொருள் சிதைவுபடாமல் எளிய தெளிவான தரமான ஆங்கில நடையில் படிப்போர்

புரிந்துகொள்ளும்வண்ணம் துல்லியமாக மொழிபெயர்ப்புப் பணியை இலக்குவனார் நிறைவேற்றியிருப்பது வியந்து போற்றத்தக்கதாகும். ஓரிரு நூற்பாக்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை இங்குத் தருவது பொருந்துவதாகும்.

எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப;

சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.

The letter is said to be
From 'a' to 'n'
Thirty in number
Excluding the three, the occurrence of
Which depends upon others.
(தொல். 1)

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;
அஃறிணை யென்மனார் அவரல பிறவே;
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.

Those denoting human beings are called
High class
All others are called Non-class
These are two classes the words denote.
(தொல். 484)

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.

From 'Kaikkiëai' to 'Peruntiõai'
are the seven conducts described
feremost, say the scholars.
(தொல். 947)

நூற்பா அடிகளின் வரிசைமுறை பிறழாமல் மொழிபெயர்ப்பு அமைந்திருப்பது நோக்கத்தக்கது. தமிழ் மூலத்தையும் உரோமன் எழுத்துப்பெயர்ப்பையும் இணைத்து இம்மொழிபெயர்ப்பு நூல் மறுபதிப்பாக உயர்தரத்தில் உருவாக்கப்பட்டு வெளிவருதல் நிறைவேற்றப்படவேண்டிய இன்றியமையாத பணியாகும்.

திருவள்ளுவரின் காலம் கி.மு.31 என அறிஞர் குழுவால் ஒருதலையாக அறுதி முடிவெடுத்துத் தமிழக அரசு அதை ஏற்குமாறு செய்ததுபோல் தொல்காப்பியருக்கும் கால வரையறை செய்யப்படவேண்டும். கி.மு.10000 முதல் கி.பி.1000 வரையிலான பல்வேறு காலக்கட்டங்கள்

பலராலும் சுட்டப்படுகின்ற நிலையில் இலக்குவனார் தொல்காப்பியரின் காலம் கி.மு.600க்கு முற்பட்டதாகவும் கி.மு.1000திற்குப் பிற்பட்டதாகவும் இருக்கவேண்டுமென வரையறுக்கிறார். மொழி, இலக்கியம், வரலாறு தொடர்பான பல்வேறு சான்றுகளுடன் அவர் நிறுவியுள்ள இந்தக் கால வரையறையை ஆய்வாளர்கள் மனங்கொளஎல்வேண்டும். தமிழறிஞர்கள் உடனடியாக நிறைவேற்றவேண்டிய பணிகளுள் முதன்மையானது தொல்காப்பியரின் காலத்தை ஒருதலையாக அறுதிமுடிவெடுத்தலாகும்.

தமிழ் எழுத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து வேறுபாடான கருத்துக்கள் நிலவுகின்றன. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே எழுத்துக்கள் தோன்றி அவை காலப்போக்கில் மாற்றங்கள் அடைந்துவந்துள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை.

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
(தொல். 15)

மெய் எழுத்துக்களின் மீது புள்ளிவைக்கவேண்டுமெனத் தொல்காப்பியர் கூறுகிறார். ஆய்தம் முப்புள்ளிகளால் ஆனது என்பதையும் குறிப்பிடுகிறார்.

ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன
(தொல். 2)

பின்னால் தோன்றி வளர்ந்த பிராமி எழுத்துக்களும் கிரந்த எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களிலிருந்து உருவாக்கப்பட்டவை என்றே கொள்ளவேண்டும் என்பது பேராசிரியர் இலக்குவனார் அவர்களின் துணிந்த முடிபாகும். சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே தமிழர்களுக்கு எழுதும் பழக்கம் இருந்ததென்பது கருதத்தக்கது.

தொல்காப்பியத்தில் பயின்றுவரும் சொற்களுள் சமஸ்கிருதச் சொற்கள் எனப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை சுட்டிக்காட்டியவற்றுள் ஒன்றிரண்டு தவிரப் பெரும்பான்மை மூலத்தில் தமிழ்ச் சொற்களே என இலக்குவனார் டாக்டர் கால்டுவெல் அவர்களின் சான்றுகளைத் துணைக்கொண்டு திறம்பட நிறுவியுள்ளார்.
வையாபுரிப் பிள்ளை அவர்கள் சமஸ்கிருதச் சொற்கள் எனச் சுட்டிக்காட்டிய ‘உவமம்’, ‘காலம்’, ‘காரம்’, ‘காயம்’, ‘திசை’, ‘ஆசிரியர்’, ‘இமை’ போன்ற சொற்களுக்குரிய வேர்

சமஸ்கிருதத்தில் இல்லை, தமிழிலேயே உள்ளது என்பதை இலக்குவனார் உறுதிசெய்துள்ளார்.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் ‘அந்தணர் மறை’, என்னும் சொற்றொடருக்கு ‘scriptures of the Brahmins’ எனப் பொருள்தரும் நிலையில் இலக்குவனார் அதை மறுத்து ‘book of the learned’ எனப் பொருள்கொள்வது கருதத்தக்கது.

தொல்காப்பியர் சமஸ்கிருத இலக்கணங்களின் அடிப்படையில் தொல்காப்பியத்தைப் படைக்கவில்லை என்பதை உறுதிபடப் பல்வேறு சான்றுகளுடன் இலக்குவனார் நிறுவியுள்ளார்.

மொழிப் பொதுமைகள் (language universals) எனக் குறிப்பிடும் வகையில் தொல்காப்பியர் யாத்துள்ள சில நூற்பாக்களை இலக்குவனார் அடையாளங் காட்டியுள்ளமை அவரது நுட்பமான மொழியியல் அறிவிற்குச் சான்றாக நிற்கிறது.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே
(தொல். 640)

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்
(தொல். 641)

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்
(தொல். 683)

பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே
(தொல். 874)

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா
(தொல். 877)

இலக்கணம் என்பது தொடரமைப்பை அடிப்படையாகக்கொண்டே உருபுகள், சொற்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்பது இன்றைய

மொழியியல் கொள்கைகளில் ஒன்றாகும். இதைத் தொல்காப்பியர் உணர்ந்து இலக்கணம் யாத்துள்ளமையை இலக்குவனார் நுண்ணிதின் ஆய்ந்து விளக்குகிறார்.

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே
(தொல். 494)

என்னும் நூற்பாவில் எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையிலான பிணிப்பு (concordance) குறித்துப் பேசுவது ஓர் எடுத்துக்காட்டாகும்.
பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே
(தொல். 916)

என்னும் நூற்பாவும் தொடரியல் சார்ந்ததே.
பொருளதிகாரத்தில் இடம்பெறும் சில நூற்பாக்கள் இடைச்செருகல் என்பது இலக்குவனாரின் துணிபு.
வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையுங் கருவி என்ப
(தொல். 1041)

என்னும் நூற்பா அமைப்பிலும் பொருண்மையிலும் முன், பின் நூற்பாக்களுடன் பொருந்தவில்லை என வாதிடுகிறார். தொல்காப்பியத்தில் சில விடுபாடுகளைப்பற்றியும் இலக்குவனார் சுட்டிக்காட்டுகிறார். காலத்தை மூன்றாகப் பகுத்த தொல்காப்பியர் கால உருபுகளைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்பதும் வினாப் பொருளில் வரும் 'யாது', 'எவன்' சொற்களைக் குறிப்பிட்டவர் 'யா'காரத்தையும் 'எ'கரத்தையும் வினா எழுத்துக்களாக எடுத்துக்கூறவில்லை என்பதும் எடுத்துக்காட்டுகள். இதுபோன்று தொல்காப்பிய நூற்பா மொழியில் இடம்பெறும் பல இலக்கணக் கூறுகள் நூற்பாக்களில் விளக்கப்படவில்லை என்பது கூர்ந்து ஆராயத்தக்கதாகும்.

எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் ஒலி, எழுத்து, சொல்லுருபு, சொல், தொடர், பொருண்மை குறித்த இலக்கணவியல். பொருளதிகாரம் வாழ்வியலை உள்ளடக்கிய இலக்கியவியல் என்பது இலக்குவனாரின் கருத்தாகும். தொல்காப்பியத்தைக்கொண்டு ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தின், தமிழரின், தமிழின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய இயலும் என்பது அவரது திறனாய்விலிருந்து புலப்படும் உண்மை. தொல்காப்பியத்தில் பொதிந்துள்ள இலக்கணவியல் இலக்கியவியல் கோட்பாடுகள் உலகிற்கே வழிகாட்டுவதாய் அமையும் என்பது அவரது உள்ளக்கிடக்கை. மேனாடுகளில் பிளாட்டோவும் அரிஸ்டாட்டிலும் பாடநூல்களில் இடம்பெறுவதுபோல் தொல்காப்பியரும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகப் பாடநூல்களில் இடம்பெறவேண்டுமென்பது இலக்குவனாரின் வேட்கை. பேரறிஞர் அண்ணா அவர்களும் கலைத் தந்தை கருமுத்து தியாகராசன் அவர்களும் இலக்குவனாரின் தொல்காப்பிய மொழிபெயர்ப்பிற்கும் திறனாய்விற்கும் அளித்துள்ள அணிந்துரைகளிலிருந்து குறிப்பிடத்தக்கவை: பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்று:

Tamils have got every right to feel proud of Tholkappiyam and Doctor Ilakkuvanar's masterly work is bound to enable scholars of the English speaking world to evaluate correctly the heights attained by Tamilians long long before many many nations attempted to perfect their language.


கலைத்தந்தை கருமுத்து தியாகராசன் அவர்களின் கூற்று: The great discoveries in Mohenjadaro and Harappa have established beyond about that the Tamil civilization is the oldest and richest; and Tholkappiyam is an authentic exposition of it. The unique feature of Tholkapiyam is that it formulates rules not only for words but also for letters and even for life. No country, no civilization and

no language has conceived, as early as 600 B.C., such a perfect grammar for letters, words and particularly for life…The absence of scholarly exposition of Tholkappiyam in other languages is responsible for the common ignorance of the history and literature of the ancient Tamils.But Dr. Ilakkuvanar, a reputed professor of Tamil, fully qualified by linguistic and linguistic researches, has eminently fulfilled this want.


பேராசிரியர் இலக்குவனார் அவர்களின் தொல்காப்பிய மொழிபெயர்ப்பினையும் திறனாய்வினையும் அறிஞர் உலகம் முறையாக முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். தொல்காப்பியத்திற்கு உரிய மதிப்பினை உலகளவில் வளர்த்தெடுக்க ஒல்லும் வகையான் முயல்வோமாக.

http://www.natpu.in/?p=16708

நன்றி: சென்னை வானொலி நிலையம்



https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZU0luly.TVA_BOK_0006315



எழிலரசி

அல்லது

காதலின் வெற்றி.

வாய்மேடு, சி. இலக்குவன்,

தமிழ் மாணவன் (Vid. 7d. Pre.)

அரசர் கல்லூரி,

திருவையாறு.

விஜயபுரம்,

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

 1933. விலை 0—4—0.


http://www.akaramuthala.in/modernliterature/kavithai/%E0%AE%8E%E0%AE%B4%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%B0%E0%AE%9A%E0%AE%BF-%E0%AE%85%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%A4%E0%AF%81-%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%B5-5/

தமிழ்வலை

செய்தி இணையதளம்

தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்ட முதல் தமிழறிஞர் சி.இலக்குவனார் – நினைவு நாள்

http://www.tamizhvalai.com/archives/19385



இந்தி எதிர்ப்புப் போராளி

1965ஆம் ஆண்டு மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழாசிரியர்களின் பங்கு முதன்மையானது. மாணவர்களுக்குத் தமிழ்மொழி காக்கும் உணர்வையும் இந்தித் திணிப்பை எதிர்த்திடும் போர்க்குணத்தையும் கற்றுக் கொடுத்தவர்கள் தமிழாசிரியர்கள் என்றால் அது மிகையில்லை.

மதுரை தியாகராாசர் கல்லூரி மாணவர்கள் நடத்திய முதல் போராட்டம் தான் தமிழகமெங்கும் மாணவர்களைப் போர்க்களத்தில் இறக்கி விட்டது. அந்தக் கல்லூரியில் பணியாற்றிய ஒரு தமிழ்ப் பேராசிரியர் வைத்த முதல் 'தீ' தான் காங்கிரசு ஆட்சிக்குக் கொள்ளி வைப்பதில் போய் முடிந்தது. அந்தத் தமிழ்ப் பேராசிரியர் வேறு யாருமல்லர், செந்தமிழ்க் காவலர் என்று அழைக்கப்படும் சி.இலக்குவனார் ஆவார்.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் வாய்மேடு என்னும் சிற்றூரில் சிங்கார வேலர் – இரத்தினத்தாச்சி இணையருக்கு மகனாக 17.11.1909 இல் பிறந்தார்.

எட்டாம் வகுப்புப் படித்து வந்த நிலையில் இலட்சுமணன் என இவர் பெற்றோர் இட்ட பெயரை இவரின் தமிழாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் ‘இலக்குவன்” என்று தூய தமிழில் மாற்றம் செய்தார். சாமி சிதம்பரனாரின் சீர்திருத்தக் கொள்கைகளும், தமிழ் மொழி மீதான ஈடுபாடும் இலக்குவனாரை கவர்ந்திழுத்திடவே அதுமுதலே, தன்னைத் தமிழ் மொழியோடும், தமிழ் இனத்தோடும் பிணைத்துக் கொண்டார்.

திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்று தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலையில் புகுந்தார். அதன்பிறகு தான் பயின்ற திருவையாறு அரசர் கல்லூரி, செ.தெ.நாயகம் அவர்களின் குலசேகரன்பட்டினம் தமிழ்க் கல்லூரி, திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரி, விருதுநகர் வி.இ. செந்தில் குமார நாடார் கல்லூரி, ஈரோடு மகாசனக் கல்லூரி, நாகர்கோயில் தெ.தி. இந்துக் கல்லூரி, மதுரை தியாகராசர் கல்லூரி ஆகியவற்றில் விரிவுரையாளராக, முதல்வராக, தமிழ்த் துறைத் தலைவராக பணியாற்றி வந்ததில் பல்வேறு இடர்பாடுகளை அவர் சந்திக்க நேரிட்டது.

அங்கெல்லாம் படித்து வந்த மாணவர்களிடம், “எழுத்தாகிய உடல் இல்லையேல், மொழியாகிய உயிர் அழியும்” எனும் தமது தாரக மந்திரத்தை ஒப்புவித்தார். தமிழ் மொழிக்கு வீதியில் வந்து தொண்டாற்றும்படி மாணவர்களைத் தூண்டிய காரணத்தால் கல்லூரி நிர்வாகத்தின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானார். அதுவே இலக்குவனாரை ஒரே கல்லூரியில் பணி செய்ய விடாது பல்வேறு கல்லூரிகளுக்குத் துரத்தியது.

இருப்பினும், இலக்குவனார் மற்ற எல்லாக் கல்லூரிகளைக் காட்டிலும் மதுரை தியாகராசர் கல்லூரியில் பணியாற்றும்

போதுதான் தமிழகம் அறிந்த ஒரு மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராளியாக உருவெடுத்தார்.

இன்று தமிழர்களால் அறியப்படும் கவிஞர் நா.காமராசன், முன்னாள் அமைச்சர் கா.காளி முத்து , எழுத்தாளர் சூரிய தீபன், கவிஞர்கள் இன்குலாப், மு.மேத்தா ஆகியோர் மாணவக் கண்மணிகளாக இருந்த போது , இலக்குவனாரின் தமிழ்ப் பாசறையில் பயிற்றுவிக்கப் பட்டவர்களே! 1965 மொழிப்போரின் தளபதிகளாக இம்மாணவர்கள் திகழ்ந்தார்கள்.

அப்போது அன்னைத் தமிழைக் காத்திட இந்தி மொழியை ஆட்சி மொழி என்று வலியுறுத்தும் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவை கொளுத்தப் போவதாக மாணவர் பட்டாளம் சூளுரைத்தது. இதைக் கண்டு பக்தவத்சலம் அரசின் காவல்துறை குலை நடுங்கிப்போய் இலக்குவனாரை சந்தித்து முறையிட்டது. மாணவர்கள் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போரை கைவிடும்படி அறிக்கை விடுமாறு இலக்குவனாரைக் கேட்டுக் கொண்டது.

அப்போது அவர் கூறியது இதுதான். “தமிழ் மொழிக்காகப் போராடிவரும் மாணவர்களிடம் போய் போராட்டத்தை நிறுத்து என்று சொல்பவன் நல்ல ஆசிரியனும் அல்லன்; அதுபோல் பிறந்தார் பேச்சைக் கேட்டு போராட்டத்தை நிறுத்துபவன் நல்ல மாணவனும் அல்லன்” என்றார்.

இலக்குவனாரின் மேற்கூறிய விடையைக் கேட்டு ஆத்திரமுற்ற காவல்துறை இலக்குவனாரை கைது செய்து சிறையிலிட்டது. சில மாதங்களில் வெளி வந்த இலக்குவனார் “தமிழ் உரிமை பெரு நடைப் பயணம்” மேற்கொள்ளப் போவதாக அறிவிப்பொன்றை வெளியிட்டார்.

இலக்குவனாரை நீண்டநாள் சிறை வைப்பதைத்தவிர இனி வேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்ட பக்தவத்சலம் அரசு

அவரைப் பணிநீக்கம் செய்திட ஆணையிட்டதோடு, இந்திய பாதுகாப்புச் சட்டத்தில் (D.I.R.) சிறையிலும் அடைத்தது.

தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்ட முதல் தமிழறிஞர் இலக்குவனார்தான்.

பேராசிரியர் இலக்குவனார் தொல்காப்பியத்தை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். தொல்காப்பியத்தின் காலம் "கி.பி. 2 ஆம் நூற்றாண்டு" என்று பல அறிஞர் பெருமக்கள் கூறிய நிலையில், "கி.மு.7 ஆம் நூற்றாண்டே தொல்காப்பியத்தின் காலம்" என்று ஆதாரங்களோடு மெய்ப்பித்தார்.

காங்கிரசு ஆட்சியில் இலக்குவனார் பணிநீக்கம் செய்யப்பட்ட போதிலும் கவலையுறாது தமிழ்த் தொண்டு புரிந்து வந்ததை கண்டுணர்ந்த அண்ணா , ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பக்தவச்லம் அரசின் பணி நீக்க ஆணையை நீக்கி மீண்டும் பணி வழங்கிடவும் செய்தார்.

திராவிட இயக்கத்தின் அடியொற்றி வளர்ந்த அறிஞர்களுள் ஒருவராக இலக்குவனார் அறியப்பட்ட போதிலும் பெரியாரைப் போல் சிலப்பதிகாரத்தைப் பழித்தவர் அல்ல; 1951 ஆம் ஆண்டு ஆம்பூரில் திராவிடர்கழகத்தின் இலக்கியப் பிரச்சாரகராக இருந்து கொண்டே சிலப்பதிகாரம் பெண்ணைப் பெருமைப்படுத்திப் பேசும் இலக்கியம் என்று பேசினார். அதை விடுதலை ஏடே (15.03.1951) 'சிலப்பதிகாரத்தின் சிறப்பு' என்று தலைப்பு கொடுத்து வெளியிட்டது.

அண்ணாவும் 'தீ பரவட்டும்' என்று கூறி கம்பராமாயணம்,பெரிய புராணம் போன்ற தமிழ் இலக்கிய நூல்களைக் கொளுத்த வேண்டும் என்று அந்தக் காலத்தில் பேசி வந்தார். அப்போது இலக்குவனார்

"கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற இலக்கியங்கள்

மூடநம்பிக்கைகளைப் பரப்புவது உண்மையெனினும் மூடக்கருத்துகளை விலக்கியும் சிறந்த நெறிகளையும் மொழி வளத்தையும் இனங்கண்டு போற்றியும் பின்பற்றுவதை விடுத்து அவற்றைக் கொளுத்த முனைதல் தேவையற்றது" என்று மறுப்புரை எழுதினார்.


அவர் அனைத்துக் கல்லூரிகளிலும் ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து வந்ததோடு , கல்லூரிகளில் உடனடியாகத் தமிழ் பயிற்று மொழித் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று தான் நடத்திய 'குறள் நெறி' ஏட்டிலே தொடர்ந்து எழுதி வந்தார்.

03.09.1973 இல் செந்தமிழ்க் காவலர் சி.இலக்குவனார் மறைவுற்றார்.

இலக்குவனார் அன்று தி.மு.க. ஆட்சிக்குக் கூறியதையே மீண்டும் இன்றைய தமிழக அரசிற்கும் நாம் நினைவூட்டுகிறோம். "உதட்டளவில் தமிழ்ப் பற்றைக் காட்டி விட்டு உலகப் புகழ் பெற நாடுகின்றீர்கள். ஆனால் உயர் தமிழைப் பின்னுக்குத் தள்ளி விட்டீர்கள்! இப்பொழுதேனும் பிழையை உணர்ந்து தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தை (அனைத்து நிலைகளிலும்) செயல்படுத்துங்கள்".

இலக்குவனார் புகழ் ஓங்குக! அவரது செந்தமிழ்ப் பணியைத் தொடர்வோம்!

-கதிர் நிலவன்



பேராசிரியர் சி. இலக்குவனார் (1909-1973) தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியங்கள் மற்றும் மொழியியல் சார்ந்து பல ஆய்வு நூல்களை எழுதிய தமிழறிஞர் ஆவார். அவரது முக்கிய நூல்களாக தொல்காப்பிய ஆராய்ச்சி, எனது வாழ்க்கைப் போர், மாணவர் ஆற்றுப்படை, மற்றும் எல்லோரும் இந்நாட்டரசர் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சி. இலக்குவனார் எழுதிய முக்கிய நூல்கள்:

- **ஆராய்ச்சி நூல்கள்:**
    - தொல்காப்பிய ஆராய்ச்சி
    - தொல்காப்பியம் - ஆங்கில மொழிபெயர்ப்பு
    - திருக்குறள் ஆராய்ச்சி
    - இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் - சங்க காலம்
- **தன்வரலாறு & இலக்கியம்:**
    - எனது வாழ்க்கைப் போர் (தன்வரலாறு)
    - மாணவர் ஆற்றுப்படை
    - எழிலரசி அல்லது காதலின் வெற்றி
- **சமூக/அரசியல் சார்ந்து:**
    - எல்லோரும் இந்நாட்டரசர் – பகுதி 1 & 2

அவர் தமிழ் எழுத்துக்களின் தொன்மை குறித்தும், மொழி சார்ந்தும் பல கட்டுரைகளையும், நூல்களையும் இயற்றியுள்ளார்.

என் வாழ்க்கைப் போர்

ஆளுமை, இலக்கியம்

https://www.sramakrishnan.com/%E0%AE%8E%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D-%E0%AE%AA%E0%AF%8B%E0%AE%B0%E0%AF%8D/



தமிழ் அறிஞர் சி.இலக்குவனார் அவர்களின் சுயசரிதையான **என் வாழ்க்கைப் போர்** என்ற நூலை வாசித்தேன். நாகை மாவட்டம்

வேதாரண்யம் அடுத்த வாய்மேடு கிராமத்தில் 1909 ஆம் ஆண்டு எளிய குடும்பத்தில் பிறந்தவர் இலக்குவனார்.

இவரது வாழ்க்கை வரலாறு நூறு வருஷங்களுக்கு முன்பு நாகை பகுதி கிராமங்கள் எப்படியிருந்தன. கிராமப்புற வாழ்க்கையில் கல்வி பெற எவ்வளவு போராட வேண்டியிருந்தது என்பதன் சாட்சியமாகவுள்ளது.

கிராமத்தில் பெட்டிக்கடை வைத்திருந்த இலக்குவனாரின் தந்தை ஒரு நாள் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்படுகிறார்.. அந்த நாட்களில் வயிற்றுப்போக்கு வந்தால் இறந்து போய்விடுவார்கள் என்ற பயம் இருந்தது.

அது போலவே குடும்பம் அவரது நோயைக் கண்டு அஞ்சுகிறது. காளியம்மாள் வந்து விட்டாள் என்று தெய்வத்திற்குப் பரிகாரம் அளிக்கப்படுகிறது. நாட்டு வைத்தியத்தால் பயனில்லை. தந்தை வயிற்றுப்போக்கு நிற்காமல் மரணத்துடன் போராடுகிறார். இஸ்லாமிய வைத்தியர் ஒருவரை அழைத்து வருகிறார்கள். அவர் வெள்ளைக் குதிரை ஒன்றில் வந்து இறங்கி பரிசோதனை செய்கிறார். பின்பு ஒரு வார்த்தை பேசாமல் போய்விடுகிறார். அன்றிரவே இலக்குவனாரின் தந்தை இறந்துவிடுகிறார். இறந்த தந்தையின் உடலைக் காணத் தூக்கத்திலிருந்து எழுப்பி அருகில் அழைத்துப் போககிறார்கள்

இந்தக் காட்சிகளை ஒரு நாவலில் வருவது போல துல்லியமாக விவரிக்கிறார் .

காலராவில் இறந்தவர்களுக்குச் சாப்பறை கொட்டக்கூடாதாம். ஆகவே இறுதி ஊர்வலத்தில் சங்கு மட்டுமே ஊதியிருக்கிறார்கள். இறந்த உடலுக்கு எண்ணெய் குளியல் செய்யும் பழக்கம் இருந்தது என்ற தகவலைக் கூறுகிறார். அது எனக்கு விநோதமாகப் பட்டது.

தந்தையின் நோய்மை குறித்து மட்டுமில்லை. அந்த நாட்களில் வயிற்றுப்போக்கு எவ்வளவு கொடிய நோயாகக் கருதப்பட்டது.

தந்தை இல்லாத குடும்பம் எத்தனை அவமானங்களைச் சந்திக்கிறது என்பதையும் இலக்குவனார் மிக உணர்ச்சிப்பூர்வமாக எழுதியிருக்கிறார்

தந்தை இறந்தபிறகு வீட்டில் விளக்கு வைக்கக் கூட எண்ணெய் இல்லை. இருட்டில் அமர்ந்து சாப்பிட வேண்டிய நிலை. வேறு வழியில்லாமல் வைக்கோல் போரைக் கொளுத்தி அந்த வெளிச்சத்தில் சாப்பிடுகிறார்கள்.

அன்றைக்குத் திண்ணைப்பள்ளிக்கூடம் தான் கல்வி நிலையம். அங்கே பச்சை களிமண்ணில் ஹ என்று எழுதி அதை நெருப்பில் சுட்டு செங்கல்லாக வைத்திருப்பார்கள்.

அந்தச் செங்கல்லில் உள்ள எழுத்தின் மீது மாணவன் விரல் இழுத்துச் செல்லப்படும். மாணவன் விரைவில் கற்றுக் கொள்ளாவிட்டால் விரலை அழுத்தித் தேய்த்து ரத்தம் கட்டிக் கொண்டுவிடும். இப்படிக் கல்லில், மணலில் எழுத்து பயின்ற பிறகே எழுத்தாணி கொண்டு எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கப்படும் என்கிறார் இலக்குவனார்.

திண்ணைப் பள்ளிக்கூடம் காலை ஏழு மணிக்குத் துவங்கி மதியம் பனிரெண்டு மணிக்கு முடிவு பெறும். அதன்பிறகு இரண்டு மணிக்குத் துவங்கி ஐந்து மணிக்கு முடியும்.

அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்கள் விடுமுறை நாட்கள். அந்நாட்களில் மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் காணிக்கை தர வேண்டும். அந்த காணிக்கையின் பெயர் வாவுக்காசு. பெற்றோர்களின் வசதிக்கு ஏற்ப காணிக்கை தர வேண்டும். காய்கறி பழங்களும் காணிக்கையாகத் தரப்படுவது உண்டு.

கட்டணம் கட்டிப்படிக்க முடியாத சூழலில் இலவச கல்வி வேண்டி திருவையாறுக்குப் போகிறார். காசில்லாத காரணத்தால் நடந்தே போக வேண்டிய சூழல். பசியோடு நடக்கிறார்.

அன்னசத்திரத்தில் உணவு கிடைக்கிறது. உறைவிடப்பள்ளியில் அனுமதிக்கப்படுகிறார்.

அங்கோ சாதி வேறுபாடு மேலோங்கியிருக்கிறது. பிராமணர்கள் தனியாகச் சாப்பிட வைக்கப்படுகிறார்கள். பிற சாதியினர் அவரவர் சாதி நிலைக்கு ஏற்ப அடுத்த பந்தி எனச் சாப்பிட அழைக்கப்படுகிறார்கள். இந்தக் கொடுமையை யாரும் கேள்விகேட்கமுடியாத சூழல் இருந்ததையும் நீதிக்கட்சி தலைவர் பன்னீர் செல்வம் இதில் தலையிட்டு இந்த முறையை மாற்றியதையும் பதிவு செய்திருக்கிறார்.


பன்னீர் செல்வம் முயற்சியால் அன்ன சத்திரங்கள் , ஏழை மாணவர்களின் இலவச உணவு விடுதிகளாக மாற்றப்பட்டது. குறிப்பாக ஒரத்தநாடு, ராசா மடம் என்னும் இரு ஊர்களில் இருந்த சத்திரங்கள், மாணவர் உறைவிட விடுதிகளாக உருமாற்றம் பெற்றன. ராசாமடத்தில் தான் இலக்குவனார் பயின்றார். இதே ராசாமடம் இலவச விடுதியில் தங்கிப் பயின்ற இன்னொரு மாணவர் இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன்.

உறைவிடப்பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு வாழை இலையில் சோறு போடுகிறார்கள். காலை உணவாகச் சுடுசோறும் மோரும் ஊறுகாயும். இரவு உணவு சோறும் கூட்டும் சாம்பாரும் தரப்பட்டது. அந்த நாட்களில் தட்டில் சாப்பிடுகிறவர்கள் என்றால் அவர்கள் கிறிஸ்துவர்கள் என்று கருதினார்களாம். ஆகவே தான் வாழை இலை.

மாணவர்கள் நீண்ட கூந்தல் வளர்த்து குடுமி வைத்திருப்பதே வழக்கம். அதற்கு மாற்றாகத் தனது கூந்தலை இலக்குவனார் கிராப் வெட்டிக் கொண்டுவிடவே ஆசிரியர் நல்ல பையன் இப்படி நடந்து கொண்டுவிட்டானே என்று

ஆதங்கப்பட்டிருக்கிறார். குடுமி இல்லாத ஆண்பிள்ளையா எனப் பலரும் கேலி பேசியிருக்கிறார்கள்.

விடுதியிலிருந்தால் மூன்று வேளையும் உணவு கிடைக்கும். வீட்டிற்கு போனால் அதுவும் கிடைக்காதே என்று பல மாணவர்கள் விடுமுறையின் போதும் விடுதியிலே தங்கிவிடுவது உண்டாம். இலக்குவனாரும் அப்படித் தங்கியிருந்திருக்கிறார்



வறுமை ஒருவனைத் துரத்தும்போது கல்வி ஒன்று மட்டுமே அவனைக் காப்பாற்றக்கூடியது என்பதற்கு இலக்குவனாரே சாட்சியமாக விளக்குகிறார்.
அந்தக்காலத்தில் நன்றாகப் படிக்கக் கூடிய வசதியில்லாத பையனுக்கு
ஆசிரியர்களே பரிட்சைக்கட்டணம் கட்டியிருக்கிறார்கள். ஊரின் முக்கியப் பிரமுகர்கள் ஏழை மாணவர்கள் படிக்க உதவி செய்திருக்கிறார்கள். அதே நேரம் காசு சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவே பலரும் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தினார்கள் என்பதையும் இலக்குவனார் பதிவு செய்திருக்கிறார்.

பொன்னண்ணாக் களத்தில் வென்றார் என்ற தனது ஆசிரியர் பற்றி வியந்து கூறுகிறார். அவரது பெயரே எவ்வளவு சிறப்பாக உள்ளது பாருங்கள். இது போன்ற பெயருள்ள மனிதர்கள் இப்போதில்லை. இந்தப் பெயர்களும் காலத்தில் மறைந்துவிட்டன. தமிழ் அறிஞராக இருந்த போதும் களத்தில் வென்றார் தனது ஓய்விற்குப் பிறகு ஆசையாக ஆங்கிலம் பயின்றிருக்கிறார். அதுவும் தன் மாணவர் இலக்குவனார் இடத்தில்

ஆண்டு இறுதிப் பரீட்சை கட்டணம் கட்டுவதற்குப் பணமில்லை என்ற காரணத்தால் வீட்டின் முன்பு இருந்த வாகை மரம் ஒன்றை 25 ரூபாய்களுக்கு விற்று முன்பணமாகக் கிடைத்த பதினைந்து ரூபாயைக் கொண்டு போய்ப் பரீட்சை எழுதப் பணம் கட்டியதாகக் கூறுகிறார்.

தஞ்சை மாவட்டத்தில் நீதிக்கட்சி வளர்ச்சி அடைந்த விதம் பற்றியும் பெரியார் எப்படி ஊர் ஊராகப் போய்ப் பிரச்சாரம் செய்தார் என்பதையும் பதிவு செய்திருக்கிறார். சுயமரியாதை இயக்கம் என்பதை இலக்குவனார் தன் மதிப்பு இயக்கம் என்றே குறிப்பிடுகிறார். தன் மதிப்பு இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டங்கள். அங்குப் பேசப்பட்ட விஷயங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

தமிழ் வகுப்புகளில் மாணவர்கள் தங்களது வருகைப் பதிவை 'யெஸ் சார்' என்று கூறிவந்ததை மாற்றி, 'உள்ளேன் ஐயா' என்று கூறவைத்தவர் இலக்குவனாரே. பின்னரே தமிழகம் முழுவதும் இம்முறை பின்பற்றப்பட்டது..

பள்ளி ஆசிரியர், கல்லூரி ஆசிரியர். தமிழ்த் துறை தலைவர் என்று பல்வேறு பணிகள் செய்த இலக்குவனார். விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரி தமிழ்த்துறைத்தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.. 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் விருதுநகர் தொகுதியில் காமராஜரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார் என்பதற்காக இவரது வேலை பறிபோனது. பின்பு குலசேகரன்பட்டினத்தில் தொடங்கப்பட்ட தமிழ் கல்லூரியில் முதல்வராகவும் பின்னர், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றி பின்பு மதுரை தியாகராயர் கல்லூரி தமிழ்த் துறை தலைவராகப் பணியாற்றினார்.,.

இலக்குவனாரிடம் தமிழ் பயின்ற மாணவர்களில் முக்கியமானவர்கள் கலைஞர் மு. கருணாநிதி, முனைவர் கி. வேங்கட சுப்பிரமணியன், தோழர் நல்லகண்ணு, சபாநாயகர் காளிமுத்து, கவிஞர் நா. காமராசன், எழுத்தாளர்

பா.செயபிரகாசம், இன்குலாப், முனைவர்

பூ. சொல்விளங்கும்பெருமாள் ஆவார்.

பள்ளியில் பணியாற்றிய காலத்தில் ஆண்டு தோறும் தொல்காப்பியர் திருநாள், திருவள்ளுவர் திருநாள், இளங்கோ அடிகள் திருநாள், ஔவையார் திருநாள், மறுமலர்ச்சி நாள் என்று ஐந்து விழாக்கள் கொண்டாடி தமிழிலக்கியத்தின் பெருமைகளை அனைவரும் உணரச் செய்திருக்கிறார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் துவக்கமாகக் கருதப்படும் மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்கள் நடத்திய முதல் போராட்டம் இவரது உரையில் உருவான எழுச்சியே. இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்காக இலக்குவனாரைக் கைது செய்து சிறையிலிட்டது அன்றைய அரசு.தொல்காப்பியத்தின் மீது மிகுந்த பற்று கொண்ட இலக்குவனார் தனது முனைவர் பட்ட ஆய்வையும் தொல்காப்பியத்தில் தான் செய்திருக்கிறார்.

இந்நூல் இலக்குவனாரின் வாழ்க்கை வரலாறாக மட்டுமின்றிச் சுதந்திரத்திற்கு முந்திய தமிழக வாழ்க்கையின் சாட்சியமாகவும் உள்ளது.

சி. இலக்குவனார் எழுதிய 'எழிலரசி அல்லது காதலின் வெற்றி' (1933) ஒரு தனித்தமிழ்ப் பாவியம் ஆகும். இது காதல் மற்றும் காவிய நயத்துடன் எழுதப்பட்ட ஒரு மொழியாக்கப் பாவியம் என அறியப்படுகிறது.

முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** பேரா. சி. இலக்குவனார்.
- **வகை:** தனித்தமிழ்ப்பாவியம் / செய்யுள்.
- **வெளியான ஆண்டு:** 1933.

இது அவரது ஆரம்பகாலப் படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது

பேராசிரியர் சி. இலக்குவனார் எழுதிய "தமிழ் கற்பிக்கும் முறை" (Teaching of Tamil) என்பது, தமிழ் மொழியை முறைப்படி, பயனுள்ள வகையில் கற்பிப்பதற்கான கொள்கைகளையும், வழிமுறைகளையும் விளக்கும் கல்வியியல் நூலாகும். இது தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கான ஒரு சிறந்த வழிகாட்டியாகக் கருதப்படுகிறது.

தமிழ் கற்பிக்கும் முறை - சிறப்பம்சங்கள்:

- **பயிற்சி முறை:** இலக்கணம் மற்றும் இலக்கியத்தை எளிய முறையில் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான வழிமுறைகளை விளக்குகிறது.
- **மொழித்திறன் மேம்பாடு:** தமிழைப் பிழையின்றி எழுதவும், பேசவும், வாசிக்கவும் கற்றுக்கொடுப்பதற்கான நுட்பங்கள் இதில் விவாதிக்கப்பட்டுள்ளன.
- **கல்வியியல் அணுகுமுறை:** கல்வியியல் கொள்கைகளைத் தமிழில் கற்பித்தலுக்குப் பயன்படுத்துவதை வலியுறுத்துகிறது.

சி. இலக்குவனார் தமிழ் மொழி கற்பித்தலில் நவீன மற்றும் இலக்கணச் செறிவான முறைகளை வலியுறுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது



சி. இலக்குவனார் எழுதிய 'தொல்காப்பிய ஆராய்ச்சி' (1961) நூல், தொல்காப்பியத்தை எளிய தமிழில் மக்களிடம் கொண்டு சேர்க்கவும், அதன் தனித்தன்மையை விளக்கவுமாக எழுதப்பட்ட

ஒரு மிகச்சிறந்த ஆய்வு நூலாகும். இந்நூல் தொல்காப்பியரின் காலம், தமிழரின் பழங்கால வரலாறு மற்றும் தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களின் சிறப்புகளை விளக்கும் வகையில் அமைந்துள்ள ஒரு இன்றியமையாத படைப்பாகும்.


நூலின் சிறப்பம்சங்கள்:

- **நோக்கம்:** தொல்காப்பியத்தைத் தமிழர்கள் ஆழமாகக் கற்க வேண்டும் என்ற நோக்கில், அதன் உயர்வைக் காட்டும் வகையில் எழுதப்பட்டது.
- **பொருளடக்கம்:** எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களையும், அதிலுள்ள நுட்பமான இலக்கணக் கூறுகளையும், தற்காலப் புரிதலோடு இந்நூல் விளக்குகிறது.
- ***கால ஆராய்ச்சி*:** தொல்காப்பியர் திருக்குறளாராய்ச்சிக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பதை இரு நூல்களையும் ஒப்பாய்வு செய்து, தனது கருத்துக்களை நிறுவுகிறார்.
- ***பண்பாட்டுப் பார்வை*:** தொல்காப்பியம் வெறும் இலக்கணம் மட்டுமல்ல, அது தமிழரின் பண்பாட்டு, வரலாற்று ஆவணம் என்பதை இலக்குவனார் தெளிவுபடுத்துகிறார்.

ஆசிரியர் மற்றும் பதிப்பு விவரம்:

- ***ஆசிரியர்*:** சி. இலக்குவனார் (தமிழ்க் காப்புக் கழகம்).
- ***பதிப்பகம்*:** புதுக்கோட்டை வள்ளுவர் பதிப்பகம் (முதற்பதிப்பு: 1961).
- ***பக்கம்*:** சுமார் 126 முதல் 224 பக்கங்கள் வரை வெவ்வேறு பதிப்புகளில் உள்ளன.

இந்நூல் தொல்காப்பியம் மற்றும் தமிழ் மொழி ஆராய்ச்சி செய்பவர்கள் அனைவரும் படித்துத் தெளிய வேண்டிய ஒரு முக்கிய நூலாகும்.



சி. இலக்குவனார் எழுதிய "இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்" (சங்க காலம்) என்பது சங்க இலக்கியச் சான்றுகள் மூலம் தமிழர் பண்பாடு, சமுதாய நிலை, ஆட்சிமுறை மற்றும் காதல், வீரம் ஆகியவற்றை விளக்கும் ஒரு முக்கிய ஆராய்ச்சி நூலாகும். இது பழந்தமிழரின் சிறந்த வாழ்வியல் நெறிகளையும், இயற்கையோடு இணைந்த வாழ்க்கையையும் எடுத்துக் காட்டுகிறது.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- ***சங்க கால வாழ்வியல்:*** இந்நூல் சங்க இலக்கியங்கள் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) காட்டும் அக்கால மக்களின் சமுதாய அமைப்பை நுணுக்கமாக ஆராய்கிறது.
- ***பண்பாடு மற்றும் காதல்:*** தமிழர்களின் அகவாழ்வு (காதல்) மற்றும் புறவாழ்வு (வீரம், கொடை) எவ்வாறு இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதை விவரிக்கிறது.
- ***ஆட்சிமுறை:*** மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, போர்முறை மற்றும் நீதியுணர்வு ஆகியவை பற்றிப் பேசுகிறது.
- ***வாழ்க்கை முறை:*** நிலப்பிரிவுகள் (ஐந்திணை), தொழில் மற்றும் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் அம்சங்களை விவரிக்கிறது.

1962 இல் வெளியான இந்த நூல், தமிழர்களின் பழமையான கலாச்சாரத்தை அறிவியல் பூர்வமாகப் பகுப்பாய்வு செய்யும் ஒரு சிறந்த வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகிறது.

டாக்டர் சி. இலக்குவனார் எழுதிய **சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்** (1990) என்னும் நூல், சங்க இலக்கியப் பாடல்களின் உரைத்திறன் மற்றும் சொல்லாராய்ச்சி, குறிப்பாக

மாமூலனார் பாடல்களின் ஓவியப் புனைவுகளை விளக்கும் ஒரு சிறந்த திறனாய்வு நூலாகும். சென்னை திருமகள் நிலையத்தால் வெளியிடப்பட்ட இந்நூல், சங்க கால மக்களின் வாழ்க்கை முறையைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

நூலின் சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** பேராசிரியர் சி. இலக்குவனார் (1909-1973), சிறந்த தொல்காப்பிய மற்றும் சங்க இலக்கிய ஆராய்ச்சியாளர்.
- **பொருள்:** சங்க இலக்கியப் பாடல்களின் உவமைச்சிறப்பு, வரலாற்று அறிவு, மற்றும் நாடகவிளக்க மாண்பு ஆகியவற்றை இது விளக்குகிறது.
- **மாமூலனார் பாடல்கள்:** இப்புத்தகம் பெரும்பாலும் மாமூலனாரின் காதல் காட்சிகள் மற்றும் சொல்லோவியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- **வெளியீடு:** சென்னை திருமகள் நிலையம், 1990 ஆம் ஆண்டு முதன்முதலாக வெளியிட்டது.
- **பதிப்பு:** 176-178 பக்கங்களைக் கொண்ட இந்த நூல், சங்க இலக்கியத்தின் நுட்பமான சொல்லாட்சிகளை விளக்கிக் காட்டுகிறது.

இந்நூல், சங்க இலக்கிய இதழ்கள் (1945-47) மூலம் தொகுக்கப்பட்டு, பின்னர் தனி நூலாக வெளியிடப்பட்டது.



பேராசிரியர் சி. இலக்குவனார் எழுதிய **"வள்ளுவர் கண்ட இல்லறம்"** (மணிவாசகர் பதிப்பகம்), திருக்குறளில் திருவள்ளுவர் போற்றும் இல்லற வாழ்வின் சிறப்புகள், கடமைகள் மற்றும்

அறநெறிகளை விளக்கும் ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல் ஆகும். இது இல்லறத்தை அறத்தின் அடிப்படையாகக் கொண்டு, அன்பு, விருந்தோம்பல், இனியவை கூறல் போன்ற பண்புகளை வலியுறுத்துகிறது.

முக்கிய அம்சங்கள்:

- ***அறத்தின் அடிப்படை:*** *இல்லறமே சிறந்த அறம் என்றும், அது மற்ற அறங்களுக்கு அடிப்படையாக அமைகிறது என்றும் இந்நூல் வலியுறுத்துகிறது.*
- ***அன்புடைமை:*** *கணவன்-மனைவிக்கிடையேயான அன்பும், குடும்ப உறுப்பினர்கள் மீதான பாசமும் இல்லறத்தின் உயிர்நாடி.*
- ***விருந்தோம்பல்:*** *இல்லறத்தார் விருந்தினர்களை உபசரிப்பதை முக்கியக் கடமையாகக் கொள்ள வேண்டும்.*
- ***இனியவை கூறல்:*** *குடும்பத்தில் இனிய சொற்களைப் பேசி மகிழ்ச்சியை நிலைநாட்ட வேண்டும்.*
- ***வள்ளுவரின் இல்லறக் கொள்கை:*** *சி. இலக்குவனார், திருக்குறளில் உள்ள இல்லறம் தொடர்பான அதிகாரங்களை (அறத்துப்பாலில் உள்ள இல்லறவியல்) ஆழமாக ஆராய்ந்து, மனிதர்கள் எவ்வாறு நேர்மையுடனும் அன்போடும் வாழ வேண்டும் என்பதை விளக்குகிறார்.*

பேராசிரியர் இலக்குவனார், தமிழ், தொல்காப்பியம் மற்றும் திருக்குறள் ஆய்வுகளில் சிறந்தவர் என்பதால், இந்நூல் இல்லற வாழ்வைச் சரியான கோணத்தில் புரிந்துகொள்ள உதவுகிறது.



சி. இலக்குவனார் எழுதிய "என் வாழ்க்கைப் போர்" (1972) அவரது போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கை மற்றும் தமிழ்மொழி மீதான பற்றை விவரிக்கும் ஒரு சிறந்த தன்வரலாற்று நூலாகும். தமிழை உயர்தனிச் செம்மொழியாக நிலைநிறுத்தவும், தனித்தமிழ் இயக்கத்திற்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்த அவர், "தமிழ்ப் போரே எனது வாழ்க்கைப்போர்" என முழங்கியவர்.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **வாழ்க்கை மற்றும் கல்வி:** 1909-ல் வேதாரண்யம் அருகே பிறந்த இலக்குவனார், தமிழ் அறிஞராகவும், பேராசிரியராகவும், இதழாசிரியராகவும் (குறள்நெறி) பணியாற்றினார்.
- **தமிழ் முழக்கம்:** பிறமொழிப் பெயர்களைத் தவிர்த்து, தன் பெயரை 'லட்சுமணன்' என்பதிலிருந்து 'இலக்குவன்' என மாற்றிக்கொண்டார். தமிழ் பெயர்களைச் சூட்ட வேண்டும் என வலியுறுத்தினார்.
- **போராட்ட வாழ்க்கை:** கல்வியாளர், பேராசிரியர் எனப் பல பதவிகளில் இருந்தாலும், தமிழ் கொள்கைகளுக்காகவும், தமிழ் காப்பு நடவடிக்கைகளுக்காகவும் அதிகார வர்க்கத்துடன் தொடர்ந்து போராடினார்.
- **படைப்புகள்:** தொல்காப்பிய விளக்கம், திருக்குறள் எளிய பொழிப்புரை, மற்றும் தமிழ் காப்பகம் தொடர்பான பல நூல்களை எழுதியுள்ளார்.

தமிழறிஞர் இலக்குவனாரின் கொள்கை உறுதி, மொழிப்பற்று, மற்றும் நேர்மையான வாழ்வை இந்நூல் எடுத்துரைக்கிறது.

காணொளிகள்

01] **சி.இலக்குவனார் பற்றிய முழு தகவல்கள்**
https://www.youtube.com/watch?v=s0XQ8mpNGRo [32:46]

02] TNPSC பொது தமிழ் | சி. இலக்குவனார்
https://www.youtube.com/watch?v=x1Rj0rmvid0 [33:12]

03] செந்தமிழ்க் காவலர் சி.இலக்குவனார் | முனைவர் த.கு.திவாகரன்
https://www.youtube.com/watch?v=8k1-EGhWx2w [43:31]

04] **சி. இலக்குவனார் | Unit-7 | பொதுத்தமிழ்**
https://www.youtube.com/watch?v=xo7Im9eJPQU [26:30]

(😊)(😊) இலக்குவனார் (😊)(😊)